<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. 61/2025</u>

LW:4 PW :4

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. G. புனிதா, நிலை 2 பெஞ்ச் கிளார்க் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முனியாண்டி | த / பெ. | : | செல்லையன் |
| கிராமம் | : | பாமணி | தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | விவசாயம் | வயது | : | 75 |

LW: 4 PW:5

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

**முதல்விசாரணை**

நான் பாமணி கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். பாமணி கூட்டுறவு சங்கத்தில் 2013 ஆம் வருடம் ஜெயபால் என்பவர் தலைவராகவும், எதிரி தினகரன் செயலாளராகவும், குமார் எழுத்தராகவும், எதிரி சுரேஷ் எழுத்தராகவும் இருந்தனர். நான் இந்த சங்கத்தில் இயக்குநராக இருந்தேன். கடன் பட்டுவாடா செய்யும்போது தீர்மானம் போட்டு கையெழுத்து போடுவேன்.

2) என்னிடம் காட்டப்படும் **வரிசை எண் 6 தீர்மான புத்தகம் பக்கம் 46 ல் 9 வதாக உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது அதசாஆ** 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரிவு 81 விசாரணை அதிகாரி என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார். என்னிடம் காட்டப்படும் பிரிவு 81 அதிகாரியிடம் நான் கொடுத்த வாக்குமூலத்தில் வரிசை எண் 41 பக்கம் 1 முதல் 9 வரையிலான

கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அந்த கையெழுத்துக்கள் **அதசாஆ 10 முதல் அதசாஆ 18** வரை குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

3) எனது முதல்விசாரணையில் குறியீடு செய்யப்பட்டுள்ள எனது கையொப்பங்களுக்கு மேல் எழுதப்பட்டுள்ள விவரங்களான பிரிவு 81 மற்றும் தீர்மான புத்தகத்தில் உள்ளவை குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்

4) அதசாஆ 10 முதல் அதசாஆ 18 வரையிலான என்னுடைய கையெழுத்து உள்ள ஆவணமானது பிரிவு 81 ன்கீழ் விசாரணை உத்தரவு நடைமுறையில் இல்லாதபோது தயாரிக்கப்பட்டதால் அது சட்ட பிழையானது என்றும் அது நிலைநிற்கதக்கதல்ல என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது.

LATHA
Digitally signed by LATHA
Date: 2025.09.03 16:51:23 +0530

தலைமை நீதித்துறை நடுவர் ,

திருவாரூர்